1979 மார்ச் 13]

இணைப்பு II

[414-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 872 க்கான விடையைக் காண்க]

(அ) தமிழ்நாட்டில் உள்ள தோல் பதனிடும் தொழிற் சாலைகள் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சென்னை தொழிலாளர் நல சிறப்பு துணை ஆணையாளர் முன்னிலையில் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் 17-5-1978 அன்று உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

(இ) உடன்பாட்டின் நிபந்தனைகள் பின்வருமாறு:—

(1) வேலை அளவுக்கேற்ப கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் 2—5—1978 முதல் தொழிலாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 1·80-ம் 2-5-1979 முதல் நாளொன்றுக்கு ரூ. 2·00-ம் தனிப்பட்ட ஊதிய உயர்வாக நிர்வாகம் கொடுக்கும்.

(2) வேலை அளவுக்கேற்பக் கூலி பெறும் தொழிலாளர் களுக்கு தமிழ்நாடு அரசு தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையில் 9—3—78 ஆம் நாளிட்ட 179 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையையொட்டி ஊதியம் கொடுக்கப் படும்

(3) தற்போதைய ஆண்டு ஊதிய உயர்வு விதம் தொழிலாளர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 10 காசாக உயர்த்தப் பெறும்.

(4) நிரந்தரத் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 2 ஜதை உடைகள் (பெண் தொழிலாளிக்கு சேலையும், ரவிக்கையும், ஆண் தொழிலாளிக்கு அரைக்கை சட்டையும், அரைக்கால் சட்டையும்) வழங்கப்படும்.

(5) 1978-ம் ஆண்டு மே மாதம் 2-ம் தேதி முதல் அனைத் திந்திய சராசரி விலைவாசிப் புள்ளியின் (அடிப்படை 1960) 300 புள்ளிகளுக்கும் மேற்பட்டு அதிகரித்த ஒவ்வொரு ஐந்து புள்ளிக்கும் 5 காசு என்ற வீதத்தில் தொழிலாளர்களுக்கு அகவிலைப் படியை நிர்வாகம் கொடுக்கும்.

(6) தொழிலாளர்கள் 2—5—1978-ல் கொடுத்த வேலை நிறுத்த அறிவிப்பில் எழுப்பிய பிற கோரிக்கைகளை விட்டுவிடுவர்.

(7) இந்த உடன்பாடு 17—5—1978 முதல் இரண்டு ஆண்டுகளுக்குச் செயலில் இருக்கும்.